நிறைவேற்றப்பெற்ற 2007–2008 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை		(ரூபாய்)		
		வருவாய்	மூலதனம்	கடன்
18	கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை)	1,47,444	..	..
35	பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை	..	54,743	..
40	பாசனம் (பொதுப் பணித் துறை)	94,98,92,099	..	..
42	ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை	14,17,35,603	..	..
48	போக்குவரத்துத் துறை	..	46,92,998	..
51	இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு	3,39,20,621	..	..
	பெருமொத்தம்	112,56,95,767	47,47,741	..

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(உ) மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2008–2009, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2008–2009 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து 28–7–2016 அன்று கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of Clause (1) of Article 205, read with Clause (3) of Article 203, of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of

2016 செப்டம்பர் 2] [*பேரவைத் தலைவர்*]

Tamil Nadu, hereby recommend to the Tamil Nadu Legislative Assembly, to make grants for the Demands in respect of the amount spent on certain services and purposes during the financial year 2008–2009 in excess of the amount authorised or granted for those services and purposes and for that year."

9. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 2008–2009, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2008–2009 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2008–2009 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 2–9–2016 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2008–2009 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (குறுக்கீடுகள்)